(நேர்விற்கேற்ப) நகராட்சியின் தலைவர் அல்லது ஊராட்சித் தலைவர் — உறுப்பினர்

திருபால் ரேஜிஸ், தொழிலில் ஈடுபடுத்தி சிகிச்சை யளிக்கும் மருத்துவர், ஹோமெரிஜகி தொழு நோய் சிகிச்சை நிலையம், போலம்பாக்கம் — பரனூர் இல்லத்தில் உறுப்பினர்

ரேவரேன்ட் ஃபாதர், எப்.எம். ஸ்லோஸ், பீயடி டுட்ஸ், சென்னை — பரனூர் இல்லத்தில் அரசு சார்பற்ற உறுப்பினர்

டி. என். ஜெகதீசன், இந்து குஷ்ட நிவாரண சங்கம், மயிலை, சென்னை-4 — உளுந்தூர்பேட்டை இல்லத்தின் அரசுச் சார்பற்ற உறுப்பினர்

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரையில் எத்தனை பிச்சைக்காரர்களுக்கு என்ன செலவில் புனர் வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : ஒவ்வொரு கட்டிட இல்லத்துக்கும் ரூபாய் 51.87 லட்சத்தில் இல்லங்கள் கட்டப்பட் டிருக்கின்றன. அப்படி இப்போது 3 இல்லங்கள் கட்ட ஆரம்பித் திருக்கிறோம். ஒவ்வொரு இல்லத்திலும் கிட்டத்தட்ட 200, 300 பேர் என்று, 2 உளுந்தூர்பேட்டையிலும், 1 பர்கூரிலும் இருக் கின்றன. ஒவ்வொரு இல்லத்துக்கும் கிட்டத்தட்ட 30 லட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு நிர்வாகச் செலவாக ஆகிறது.

Mahalir Mandrams

* 224. *Q.*—THIRU S. VELLAPANDIAN AND THIRU V. ISVAR MURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether any survey has been conducted into the impact of the work of the " Mahalir Mandrams " in this State?

1972 ஆகஸ்ட் 23]

மகளிர் மன்றங்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் :

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்திலுள்ள "மகளிர் மன்றங்கள்" ஆற்றிய பணியினால் விளைந்த மாற்றங்கள் குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : இல்லை.

* 225. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) the new industries started in Nilgiris and Coimbatore districts by the Mahalir Mandrams during 1971–72; and

(*b*) the number of persons benefited by these industries?

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) 1971–72-ல், நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் மகளிர் மன்றங்களினால் தொடங்கப்பட்ட புதிய தொழிற்சாலைகள் யாவை ?

(இ) இத்தொழிற்சாலைகளினால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை யாது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : (அ) 1971–72-ல் மகளிர் மன்றங்களால் நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் புதிய தொழிற்சாலைகள் எவையும் தொடங்கப்படவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Trainees in Tailoring

* 226 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there are proposals under the